8th December 1961]

Government Servants' Association

* 2173 *Q.*—SRI M. SELVARAJ (on behalf of SRI M. P. SARATHI) : *கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

அரசாங்க ஊழியர்களின் அமைப்புகளில் அவற்றின் கூட்டங்களில் அரசியல் தலைவர்களை அழைக்கப்படுவதை அரசாங்கம் தடை செய்துள்ளதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Rule 18 of the Government Servants' Conduct Rules lays down that Government servants should not bring political or outside influence to bear upon the authorities, to further their service interests.

Bridge across Manimuthar river

* 2174 *Q.*—SRI M. SELVARAJ : *கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் நகரத்தில் மணிமுத்தாறு நதியின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் எந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் ?

(இ) எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (இ) The widening of the bridge across the Manimutharnadhi has been considered not necessary at present in view of the sound condition of the existing structure and also with reference to the intensity of the traffic on this bridge.

SRI M. SELVARAJ : *இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தப் பாலத்தை அகலப்படுத்தவேண்டுமென்று திட்டமிட்டு, ஆரம்ப கட்டத்திலே வேலை துவங்கப்பட்டு பிறகு கைவிடப் பட்டது. பாலம் அகலமாக இல்லாத காரணத்தினால் இந்தப் பாலத்தில் பஸ்கள் செல்லும்பொழுது நடைபாதையில் போகிறவர் களுக்கு இடைஞ்சல் ஏற்பட்டு அதனால் அவர்கள் பாதிக்கப்படு கிறார்கள். ஆகவே இதைப் பரிசீலனை செய்து பாலத்தை அகலப் படுத்துவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?*

THE HON. SRI P. KAKKAN : *கனம் அங்கத்தினர் சொன்னபடி 1,30,000 ரூபாய் செலவில் இந்தப் பாலத்தைப் புதுப்பிக்கவேண்டு மென்று திட்டமிடப்பட்டது. எஞ்சினியர்கள் பார்த்து இந்தப் பாலம் நன்றாக இருக்கிறது, புதுப்பிக்கவேண்டிய அவசியமில்லை, இப்பொழுதுள்ள போக்குவரத்தை சமாளிப்பதற்கு இது போதும் என்று சொல்லி இருப்பதனால் இந்தத் திட்டத்தை எடுப்பதற்கு இல்லை.*

SRI M. SELVARAJ : *அந்தப் பாலத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்று கேள்வி கேட்கப்படவில்லை. குறைந்தது 4 அடியாவது இன்னும் அகலப்படுத்த முடியுமா ? இதை அரசாங் கம் பரிசீலிக்குமா என்று கேட்கிறேன்.*